ORIGINAL ARTICLE

# தமிழர் வாழ்வில் மூலிகையின் பங்கு - ஓர் ஆய்வு [TAMIḺAR VĀḺVIL MŪLIKAIYIṈ PAṄKU - ŌR ĀYVU]

## ROLE OF HERBS IN TAMILS LIFE - A STUDY

**பரமேசுவரி சங்கரன் / Parameswary Sangkaran *1**
**ஷோபா நடராஜன் / Shoba Natarajan 2**

[1] West Country Tamil Primary School, Malaysia. Email: skr.parames@gmail.com
[2] Wollongong University, Australia. Email: alangha@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/166

**Abstract**

This is a review of the herbs that used in Tamil medicine. It is a small attempt to reveal the usage of herbs of the Tamil people in ancient times. Our ancestors wrote medical notes about herbs on the songs and chitra siddhars. Only the nobles could read and use it. Not the laity people. In the oral language of the literature there were living references to the people and a number of rare medical references. The oral literature was composed for the herbal therapy practitioner. Evidence suggests that the notes on siddhars songs understandable for herbal therapy practitioner who lives in ancient time. Their attempt on medical practices are something great. Though the herbs in Tamil medicine are applicable to all. That is why the researcher made it possible to add to the masses and ideas about herbs medicine through the siddhars songs. In this study, researcher wants every medical terms in siddhars songs need to be understand by everyone. Understand that the materials used in Tamil medicine are around us and hope it is very usefull medicine for Malaysia Tamils.

**Keywords:** Tamils, life, Herbs, Role

**ஆய்வுச் சாரம்**

இக்காலத்து மக்கள் நவீன வாழ்க்கையில் சிக்கி, பாரம்பரிய மருத்துவத்தை புறம் தள்ளியுள்ளனர். இதனால் மக்கள் பல கொடிய நோய்களுக்கு ஆளாகி பல இன்னல்களுக்கிடையே வாழ்ந்து வருகின்றனர். இதற்கு காரணம் நாம் நமது மூலிகை மருத்துவத்தின் சிறப்பை மறந்ததுதான். ஆகவேதான் ஆய்வாளர் சித்தர் பாடல்கள், கதைப்பாடல்கள் மற்றும் பழமொழிகள் மூலமாக மூலிகை மருத்துவம் தொடர்பான கூறுகளையும் கருத்துகளையும் ஆராய இவ்வாய்வினை மேற்கொண்டார். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களால் மூலிகை மருத்துவம் தொடர்பான ஆய்வுகள் நடத்தப்பட்டிருந்தாலும், பழமொழிகளிலும் சித்தர் பாடல்களிலும் காணப்படும் மருத்துவ குறிப்புகளை வெளிக்கொணர்வது என்பது ஆராய்ச்சியாளரின் புதிய முயற்சியாகும். நமது

முன்னோர்கள், சித்தர் பாடல்களிலும் ஓலைச் சுவடிகளிலும் மூலிகை தொடர்பான மருத்துவக் குறிப்புகளை எழுதி வைத்திருந்தனர். அதனை அனைவரும் படித்துணரவும், பயன்படுத்தவும் வேண்டும் என்பதால், வாய்மொழி இலக்கியங்களான கதைப் பாடல் மற்றும் பழமொழிகள் மூலமாக வாழ்க்கை குறிப்புகளும் பல அரிய மருத்துவக் குறிப்புகளும் எழுதி வைக்கப்பட்டன. இந்த ஆய்வு தமிழ் பழமொழிகள் மற்றும் சித்தர் பாடல்களில் உள்ள மருத்துவ குறிப்புகளை பார்ப்பது, இதில் உள்ள மருத்துவ மாற்றங்களை அடையாளம் காண்பது, வகைகளைப் பகுப்பாய்வு செய்வது மற்றும் தமிழ் சமூகத்தின் மருத்துவ ஞானத்தை மேம்படுத்துவது போன்ற மூன்று நோக்கங்களின் அடிப்படையில் நடத்தப்பட்டது. தமிழ் மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகள் தொடர்பான ஓர் ஆய்வாக இஃது அமைந்துள்ளது. இந்த ஆய்வு மலேசியத் தமிழர்கள் அனைவருக்கும் பெறும் பயனாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு ஆரம்பிக்கப்பட்டது. மக்களின் மருத்துவம் தொடர்பானப் பிரச்சனைகளுக்குத் தீர்வாக இஃது அமைந்திருந்தது.

**கருச்சொற்கள்:** தமிழர், வாழ்வில், மூலிகைகள், பங்கு

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 25th June 2021, revised 22nd July 2021, accepted 2nd August 2021

## முன்னுரை

ஆரோக்கிய வாழ்வு என்பது ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவையும் உரிமையுமாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி மட்டுமல்ல நம் வாழ்க்கைக்குப் பொருத்தமான முதுமொழியேயாகும். நோய் தீர்க்கும் மருத்துவ முறைகளிலே முக்கியமானதும் முதன்மையானதுமாகக் கருதப்படுவது மூலிகை மருத்துவமாகும். எவ்வித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாத ஒரே வைத்தியம் மூலிகை வைத்தியம். மூலிகை என்பது பல வகைப்படும். அவற்றில் குறிப்பிட்ட சில மூலிகைகள் தொடற்பான விளக்கங்கள் மற்றும் பயன்பாடுகள் குறித்து ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

## முந்தைய ஆய்வு

சித்தர்களின் சித்த மருத்துவம் மற்றும் மூலிகை மருத்துவம் தொடர்பான முந்தைய ஆய்வுகளை இந்தப் பகுதியில் காண்போம்.

கோவிந்தராஜ், எஸ். (2009)[1], தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டப் படிப்பிற்காக, தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம் என்ற தலைப்பில் ஓர் ஆய்வினை மேற்கொண்டார். இந்த ஆய்வில் சித்த மருத்துவம் எந்த அளவிற்கு இலக்கியங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பது குறித்து ஆய்வாளர் தெளிவாக விளக்கியுள்ளார்.

சுப்பிரமணியன், வி. (1987)[2] மலேசியாவில் நடைபெற்ற, ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் அகத்தியரும் சித்த மருத்துவமும் ஓர் ஆய்வு என்ற தலைப்பில் ஓர்

ஆய்வுக் கட்டுரையைப் படைத்தார். இவ்வாய்வின் வழி அகத்தியரின் பாடல்களில் காணக்கூடிய சித்த மருத்துவ குறிப்புகள் மற்றும் அதற்கான விளக்கங்களையும் தக்க சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ளார்.

சுரேந்திரகுமார், பி. (1986)[3], என்பவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகள் என்ற தலைப்பில் கள ஆய்வினை மேற்கொண்டார். இவ்வாய்வில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வாழும் மக்களிடையே புலக்கத்தில் இருந்து வந்த மூலிகை பயன்பாடு மற்றும் அவர்கள் அறிந்த மூலிகைகள் குறித்து நேர்காணல் மூலமாக தரவுகளைத் திரட்டி ஆய்வினை முடித்தார்.

பிரகாஷ். க. (2016)[4]. என்பவர் தர்மபூரி வட்டார நாட்டுப்புற மருத்துவம் என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டார். இவ்வாய்வில் தர்மபுரி வட்டார மக்கள் கடைப்பிடித்து வந்த நாட்டுப்புற மருத்துவம் தொடர்பான விவரங்களைச் சேகரித்து தமது ஆய்வினை முடித்தார்.

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுகள் யாவும் சித்தர்களால் அமல்படுத்தப்பட்டு தமிழர் வாழ்வில் பெரும் பங்கினை ஆற்றி வந்த மூலிகை மருத்துவம் தொடர்பான ஆய்வுகளாகும். ஆய்வாளரின் தமிழர் வாழ்வில் மூலிகையின் பங்கு என்ற தலைப்பையொட்டிய ஆய்வினைச் செய்து முடிக்க பெரிதும் துணையாக இருந்தது என்றே கூறலாம்.

## மூலிகை மருத்துவம் விளக்கம்

மூலிகை மருத்துவம் என்றால் என்ன? தமிழர்களின் பாரம்பரிய மருத்துவ முறைதான் மூலிகை மருத்துவம் எனப்படுகிறது. இஃது சித்தர்களால் வழக்கப்படுத்தப்பட்ட ஒரு மருத்துவ முறையாகும். சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் மருந்துகள் யாவும் மூலிகைகளினால் செய்யப்பட்டவையே. ஆகவே இதனை மூலிகை மருத்துவம் என்றும் சித்த மருத்துவம் என்றும் அழைப்பர்.

## மூலிகை மருத்துவமும் அறிஞர் கூற்றும்

தமிழர்கள், தாம் உண்ணும் உணவுகளில் மருத்துவம் நிறைந்த பல பொருள்களைச் சேர்த்து சமைத்து உண்டு வந்துள்ளனர். அத்துடன், சங்க கால மக்கள் மருந்தில்லாமல் வாழ்வதே சிறப்பு என்பதை முழுமையாக நம்பினார்கள். இதற்குச் சான்றாக திருவள்ளுவர் தமது திருக்குறளில் - பொருட்பால் அதிகாரத்தில் 942வது குறளில் இவ்வாறு கூறியுள்ளார்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்துயது
அற்றது போற்றி உணின்
(கன்னியப்ப நாயக்கர், 2011)[5]

இதனையே வேலாயுதம் M.G.L. என்பவர் தமது *உணவும் வாழ்வும்* எனும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"ஆரோக்கியமாக வாழ மருந்தை நம்பாதீர்கள்.
நல்ல உணவிடம் உங்களை முழுமையாக
ஒப்படையுங்கள்" (*வேலாயுதம்*, 2018)[6]

மேலும் பாரம்பரிய மருத்துவத்தில், தமிழர்கள் எளிதில் கிடைக்கக்கூடிய பல இயற்கை பொருட்களைப் பயன்படுத்தி தங்களின் மருத்துவச் சேவையை மேற்கொண்டனர். எடுத்துக்காட்டாக, ஆவாரை எனும் மூலிகையைக் கூறலாம். இது மணல்பாங்கான இடங்களிலும், சாலையோரங்களிலும் மற்ற தாவரங்களிடையேயும் வளர்ந்திருப்பதைக் காணலாம். ஆவாரம் செடியாகவும் மரமாகவும் வளரக்கூடியது. ஆவாரையின் இலை, காய், பூ, மொட்டு விதை, வேர், பட்டை, பிசின் ஆகிய அனைத்து பாகங்களும் மருத்துவ குணம் கொண்டவை. மேலும் இது குளிர்ச்சித் தன்மையும் துவர்ப்புத் தன்மையும் கொண்டது (தமிழழகன், 2017)[7]. தமிழ்நாட்டைப் போலவே மலேசிய தமிழர்களிடையே ஆவாரை இன்றளவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவே உள்ளது. இம்முலிகை ஆண், பெண், பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் பயன்படக்கூடியதாகவும் உள்ளது.

மேலும், ஆவாரையின் ஒவ்வொரு பாகமும் மருத்துவ குணம் கொண்டவை என்பதற்கும் இது தமிழர் வாழ்வில் பெரும் பங்கினை ஆற்றியுள்ளது என்பதற்கும் பழமொழிகளும் சான்று பகர்கின்றன. அவ்வகையில், ஆவாரையின் இலையும் பூவும் எல்லா சூழல்களிலும் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதற்கு,

“ஆவாரைப் பூத்திருக்க சாவாரைக் கண்டதில்லை”
“ஆவாரை இலையும் ஆபத்துக்கு உதவும்”
(அனவரதநாயகம் பிள்ளை, 1998)[8]

என்ற இவ்விரண்டு பழமொழிகள் மூலம் தெளிவாகிறது.

பழமொழிகளில் மட்டுமின்றி சித்தர் பாடல்களிலும் ஆவாரையின் சிறப்புகள் குறித்து நிறைய பாடப்பட்டுள்ளது. ஆவாரையின் அனைத்து பாகங்களும் மருத்துவ குணம் நிறைந்தது என்பதற்கு தக்கச் சான்றாக *பதார்த்த குண சிந்தாமணி* எனும் நூலில் 411-ஆவது பாடல் வரிகள் வழி அறிய முடிகிறது.

மேகத்தினாலே விளைத்த சலம்
வெட்டையனல்
ஆகத்தின் பிண்ணோ டருங்கிராணி-
போகத்தான்
ஆவாரைப் பஞ்சகங் கொள் அத்தி சுரம்
தாகமும் போல் எவாரைக் கண்மடமாதோ?
(ராஜ்குமார், 2007)[9]

இப்பாடல் விளக்கம் பின்வருமாறு,
இது சரும வியாதி, மேகத்தினால் வரும் வியாதிகள் அனைத்தையும் தீர்க்கும் ஆற்றல் கொண்டது. ஆவாரம்பூ நீரிழிவு, வறட்சி, கற்றாழை நாற்றம் ஆகியவற்றைப் போக்கும் . இலை, பூ, காய், பட்டை, வேர் ஆகியவை நீரிழிவு, வெள்ளை, உட்கரு, புண், எலும்பைப் பற்றிய சுரம், நீர் வேட்கை போன்ற நோய்களைத் தீர்க்கும் வல்லமை கொண்டது.

அடுத்ததாக இஞ்சியின் சிறப்பு, பாரம்பரிய மருத்துவத்தில் சித்தர்களால் பயன்படுத்தப்படும் ஒரு மூலப்பொருள் இஞ்சி மற்றும் சுக்கு ஆகும் (உலர்ந்த இஞ்சி). இவை இரண்டும் மிகச் சிறந்த மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளன. இது மஞ்சள் மற்றும் ஏலக்காய் குடும்பத்தைச் சேர்ந்தது. ஒவ்வொன்றும் தனித் தனிச் சிறப்புகள்

கொண்டவையாதலால், தமிழர்கள் தினசரி சமையலில் இந்தப் பொருட்களைக் கட்டயமாகச் சேர்த்துக்கொள்வது கண்டறியப்பட்டுள்ளது.

'காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு மாலை கடுக்காய்'

(அனவரதநாயகம் பிள்ளை, 1998)[8]

என்பது பழமொழி. இப்பழமொழியின் வாயிலாக சித்தர்கள் இஞ்சியின் நன்மைகளை மக்களுக்கு விளக்கியுள்ளனர்.

மக்களுக்கு ஏற்படும் சில வகை நோய்த் தொற்றுகளுக்கு ஒரு தீர்வாக இஞ்சியைப் பயன்படுத்துகின்றனர். காலையில் மூன்று சிறு கரண்டி அளவு இஞ்சிச்சாறு எடுத்து சுத்தமான தேன் கலந்து வெரும் வயிற்றில் சாப்பிட பித்தம் தீரும். மதிய உணவிற்கு முன் அரை சிறு கரண்டி அளவு சுக்குத்தூளை எடுத்து சுடுநீரில் கலந்து சாப்பிட வாயுத் தொல்லை தீரும். மேலும், இஞ்சி குடல் தொடர்பான தொந்தரவுகளை நீக்கக்கூடியது என்று ஆய்வுகள் கூறுகின்றன. இது பெருங்குடல் புற்றுநோயைத் தடுப்பதற்கும் உதவுகிறது. தற்சமயம், விஞ்ஞானிகள் புற்றுநோய்க்கு இஞ்சி சாற்றால் ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர். கதிரியக்க சிகிச்சை (Chemotherapy) அல்லது நச்சு ரசாயணங்களை உடலில் செலுத்தும் போது, குமட்டலைக் குறைக்க இஞ்சி துணைப்புரிகிறது. அதுமட்டுமின்றி, மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு ஏற்படும் கடுமையான டிஸ்மெனோரியல் (Dysmenorrhea) சீர்கேட்டை சரி செய்ய உதவுகிறது. *டிஸ்மெனோரல்* என்பது வழக்கமாகப் பெண்களுக்கு மாத விலக்கு ஏற்படும் சமயங்களில் தோன்றும் ஒருவகை சீர்கேடாகும் என்கின்றனர் பிரசாத் மற்றும் குழுவினர் (2014)[10].

இஞ்சி, சுக்கு, மிளகு போன்றவை வீட்டுப் புழக்கத்திற்கான பொருள்கள். இவை நோய்களைத் தீர்க்கும் மருத்துவ குணம் பெற்றவையாகத் திகழ்கின்றன. வீட்டுச் சமையலுக்கான பயன்பாட்டு பொருள்கள் மருந்துகளாகி நோய்களைப் போக்க உதவியதால் இது வீட்டு வைத்தியம் எனவும் பெயர் பெற்றது. தங்களது அனுபவத்தின் அடிப்படையில் செய்திருக்கும் மருத்துவம் வீட்டு வைத்தியமாகும் என்கிறார் பிரகாஷ் (2016)[4]. இஞ்சிக்கு மிஞ்சி எதுவுமே இல்லை, என்பது சித்த மருத்துவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். எந்த மாதிரியான நோயாக இருந்தாலும் அதற்கான மருந்தில் பெரும்பாலும் இஞ்சி இடம்பிடித்துள்ளதே இதற்கு காரணம். ஆதலால், இஞ்சி அதன் மருத்துவ நன்மைகளுக்காகப் பரவலாக தமிழர் மருத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனலாம்.

பெரும்பாலான மக்களுக்கு, இயற்கையான காரத் தன்மையுடைய இஞ்சி பக்க விளைவுகளை ஏற்படுத்தாது. நோயைக் குணப்படுத்துவதற்கு இஞ்சியில் பல சேர்மங்கள் இருப்பதை அறிவியல் பகுப்பாய்வு நிருபிக்கிறது. இந்த கலவைகள் இரைப்பை எரிச்சலை நீக்குகின்றன. அவை பித்தம், உமிழ்நீர் உற்பத்தி மற்றும் இரைப்பை சுருக்கங்களைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றன. பலரின் கருத்துப்படி, மூலிகை மருத்துவர்கள் இந்த தாவரத்தை டானிக் (Tonic), கார்மினேடிவ் (Carminative), அழற்சி எதிர்ப்பு, மற்றும் வலி நிவாரணி என வகைப்படுத்துகின்றனர் (போட் & டோங்கு, 2011)[11].

தொடர்ந்து, தமிழர்களின் சமையலில் அதிக அளவில் பயன்படுத்தக்கூடிய ஒரு மூலிகை முருங்கையும் அகத்தியும். முருங்கையின் தாவரவியல் பெயர் மோரிங்கா ஓலிஃபெரா (moringa oleifera) என்பதாகும். முருங்கை சிறந்த சித்த மருத்துவ மூலிகை. இதில் அதிகமாக வைட்டமின் சத்துகள் உள்ளன. இதனை அளவாக வேகவைத்து உண்டால் நரம்புத் தளர்ச்சி நீங்கும். அகத்திக் கீரை பெண்கள் (கருப்பை) தொடர்பான நோயைக் குணப்படுத்தக்

கூடியது. மேலும் குடலில் ஏற்படும் புண் மற்றும் புழுத் தொல்லைகள் தீர உதவும். இதனை நன்கு வேகவைத்து உண்டால் சரியான பலன் கிட்டும், (மஞ்சை வசந்தன், 2017)[12]. இதனைத்தான்,

வெந்து கெட்டது முருங்கை வேகாமல் கெட்டது அகத்தி
(அனவரதநாயகம் பிள்ளை, 1998)[8]

என்ற பழமொழி வாயிலாக தெளிவாகிறது.

பழமொழிகளில் மட்டுமல்லாது சித்தர் பாடல்களிலும் முருங்கையின் சிறப்பு பற்றி சித்தர்கள் பாடிச்சென்றுள்ளனர் என்பதற்கு அகத்தியர் குணபாடத்தில் வரும் சித்தர் பாடல் சான்று பகர்கிறது.

செறிமந்தம் வெப்பந் தெறிக்குந் தலைநோய்
வெறிமூர்ச்சை கண்ணோய் விலகும்மறமே-
நெருங்கையிலை யொத்தவழி நேரிழையே!
நல்ல முருங்கை யிலையை மொழி
(மோகன், 2015)[13]

இதன் பொருள்,
ஜீரணக் கோளாறுகள், மந்த நோய், உடல் சூடு போன்றவை குணமாகும். உஷ்ணத்தால் ஏற்படும் தலைவலி, மயக்கம் கண் நோய்களும் விலகும். பொதுவாகவே, நாம் உண்ணும் உணவு சரியாக செரிமானம் ஆனாலே எந்த நோயும் வராது என்பதையே இப்பாடல் வரிகள் விளக்குகிறது.

மேலும், முருங்கை மரத்தை பொறுத்த வரை முருங்கைக்காய், முருங்கைப் பூ முருங்கைக்கீரை ஆகிய அனைத்தும் அற்புதமான மருந்துப் பொருளாகும், முருங்கைக்கீரையில் சத்துக்கள் நிறைய உள்ளன. இதில் வைட்டமின் ஏ, பி, சி சத்துக்களும், சுண்ணாம்புச்சத்து, புரதம், இரும்பு, கந்தகம், குளோரின், தாமிரம், கால்சியம், மெக்னீஷியம் போன்ற சத்துக்களும் உள்ளன. மேலும் அனைத்து தாதுக்களும் சம அளவில் கிடைக்கும். நோய் எதிர்ப்பு சக்தியும், உடல் வலிமையும், உறுதியும் கிடைக்கும். ஆகவேதான் முருங்கையை கற்பக தரு என்று சித்தர்கள் அழைத்துள்ளனர்.

தொடர்ந்து, கற்பூரவள்ளி அல்லது ஓம வள்ளி என்றும் அழைக்கப்படும் ஒரு கொடிவகை சிறு செடியைப்பற்றி அறிவோம். இதன் தாவரவியல் பெயர் *கோலியூஸ் அரோமாதிகுஸ்* (Coleus Aromaticus) என்பதாகும். இது 2 அடிவரை வளரக்கூடியதாலும் வேர்கள் அதிக ஆழம் செல்லாமல் கொத்து வேராக இருப்பதாலும் இதனை பெரும்பாலும் வீட்டில் தொட்டிகளில் வளர்ப்பார்கள். இச்செடியானது பச்சை வர்ணத்தில் அழகாக இருக்கும். இதன் இலைகள் தடித்தும் சொரசொரப்பாகவும் இருக்கும். இதன் இலைகளை ஒடித்தால் நல்ல தைல வாசனை வருவதோடு காரம் கலந்த சுறுசுறுவென்ற சுவையுடனும் இருக்கும். இதன் இலையே மருத்துவக் குணம் உடையது. ஆகவே கற்பூரவள்ளி, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் மிகுந்த பலனளிக்கக் கூடியது. இது மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய காச நோய், சளி, இருமல், தொண்டை கர கரப்பு போன்ற பல பிரச்சனைகளுக்கு நிவாரிணியாகத் திகழ்கிறது என்பதற்கு தக்கச் சான்றாக தேரையர் குணவாகடம் எனும் நூலில் வரும் பாடல் வரிகள் வழி அறிய முடிகிறது.

கற்பூர வள்ளியின் கழறிலை யைத்தின
நற்பாலர் நோயெலா நாசமா யகலுமே
(மோகன், 2015)[14]

இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா பகுதிகளில் மட்டுமின்றி மலேசியாவிலும் இச்செடி அதிகம் வளர்கிறது .இது முக்கியமாக வீடுகளில் வளர்க்கக் காரணம், கற்பூர வள்ளியின் இலையைச் சாறெடுத்து அதனுடன் பனங்கற்கண்டு கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் இருமல் நீங்கும். மேலும் குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தமும் விலகும். இது குழந்தைகளுக்கு வரும் சளி முதலிய நோய்களுக்கு கை கண்ட மருந்து. பிறந்த சிறிய குழந்தைக்கு கூட நம்பி இதன் சாறை கொடுப்பதை இன்றுவரை காண முடிகிறது. இதனை அகத்தியர் குணபாடம் எனும் நூலில் காணப்படும் சித்தர் பாடல் வழி அறியலாம்.

காச இருமல் கதித்தம சூரியயையம்
பேசுபுற நீர்க்கோவை பேருங்காண் வீசுசுரங்-
கற்பாறை யொத்துநெற்சிற் கட்டுகபம் வாதமும்போங்
கற்பூர வள்ளிதனைக் கண்டு
(மோகன், 2015)[13]

கற்பூரவள்ளி ஒரு சிறந்த கிருமி நாசினியாகும். இது வீட்டையும் சுற்றுப்புறத்தையும் காக்கும். வீட்டைச் சுற்றி கற்பூரவள்ளியை நட்டு வளர்த்தால் விஷப் பூச்சிகள் தொல்லையிலிருந்து தப்பலாம்.

**முடிவுரை**

இந்த ஆய்வின் இறுதியில் ஆய்வாளர், மூலிகை மருத்துவம் அனைத்து தரப்பினருக்கும் எவ்வித பக்க விளைவுகளும் இல்லாத நன்மை தரக்கூடிய ஒரு மருத்துவம் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் இவ்வாய்வானது வருங்கால தமிழ் சமுதாயத்திற்கு மூலிகை மருத்துவத்தின் சிறப்புகளை எடுத்தியம்பும் என்பதில் சிஞ்சிற்றும் ஐயமில்லை. மேலும் இந்த ஆய்வு மலேசியத் தமிழர்களுக்கும் புதிய ஆய்வாளர்களுக்கும் முன்னோடியாக இருக்கும் என்று நம்புகிறோம். மக்களின் மருத்துவம் தொடர்பானப் பிரச்சனைகளுக்குத் தீர்வாக இஃது அமைந்திருந்தது.

**மேற்கோள் நூற்பட்டியல்:**

1. Govintharaj, S. (2009). *Tamiḻ ilakkiyattil citta maruttuvam* [*Ayurvedic medicine in Tamil literature*] .Thanjavur: Tamil University.
2. Subramanian, V. (1987). *Akattiyarum citta maruttuvamum* - ōr āyvu [*Agathiyar and ayurvedic medicines – A research]*. Kuala Lumpur: Malaysia Sixth World Tamil Research Conference
3. Surenthirakumar, B. (1986). *Tañcāvūr māvaṭṭattil payaṉpaṭuttappaṭum mūlikaikaḷ - ōr āyvu* [*Herbs used in Thanjavur District – A research*]. Thanjavur: Tamil University.
4. Prakash. K. (2016). *Tarmapūri vaṭṭāra nāṭṭuppuṟa maruttuvam.* [*Dharmapuri Regional Folk Medicine*]. Thanjavur: Tamil University.
5. Kanniyappa Naicker (5th ed.). (2011). *Tirukkuṟaḷ uraikkaḷañciyam* [*Thirukkural Textbook*]. Chennai: Thiruvarasu Puthaka Nilayam.

6. Velayutham, M. G. L. (2018). *Uṇavum vāḻvum* [*Food and live*]. Malaysia P. C. Graphics (M) Sen. Ber.
7. Tamilalagan. V. (2017). *Paḻaṅkaḷ paccilaic cāṟukaḷiṉ maruttuva kuṇaṅkaḷ* [*Medicinal properties of fruit & herb juices*]. Bangalore: Sapna Book House.
8. Anavarathanayakam Pillai. (1998). *Paḻamoḻi akarāti* [*Proverb Dictionary*]. Chennai: Amutha Nilayam Limited.
9. Rajkumar, G. A. (2007). *Intiya maruttuvam – ōmiyōpatit tuṟai* [*Indian medicine – ophthalmology department*]. Chennai: Vijaya Pathippagam.
10. Prasath. S., Kim. J. H, Kuptha S. C. Agarval P. (2014). Maruntiyal aṟiviyalil pōkkukaḷ [*Trends in Pharmacology*]. Trends in Pharmacology Sciences, 2014; 35 (10): 520–536. doi: 10.1016 / j. tips.2014.07.004. Retrieved from https://www.sciencedirect.com/journal/trends-in-pharmacological-sciences/vol/35/issue/10
11. Bode, A. M., & Dong, Z. (2011). The amazing and mighty ginger. Herbal medicine: Biomolecular and clinical aspects, 2.
12. Vacanthan Mancai, (2017). *Paḻamoḻi vaḻaṅkum palturaic cintaṉaikal* [*Versatile Ideas by Proverb*]. Chennai: Vijaya Pathippagam.
13. Mogan, R.C. (2015). *Akattiyar kuṇapāṭam* [*Agathiyar cure*]. Chennai: Thamarai Nuulagam.
14. Mogan, R.C. (2015). *Tēraiyar kuṇavākaṭam* [*Therapeutic cure*]. Chennai: Thamarai Nuulagam.